செ.வெ.எண் - 486 நாள் 27-07-2011

# செய்தி வெளியீடு

அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான தேர்வு எழுதுவதற்கு பயிற்சி அளிக்க தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இனங்களைச் சார்ந்த மாணவர்களுக்கென ஒரு பயிற்சி மையமும், ஆதி திராவிடர் - பழங்குடியினர் மாணவர்களுக்கெனத் தனியாக ஒரு பயிற்சி மையமும் 2000 ஆம் ஆண்டு வரை இயங்கி வந்தன. அதன் பின்னர், இந்த இரண்டு பயிற்சி மையங்களும் ஒன்றிணைக்கப்பட்டு, "அகில இந்திய குடிமைப்பணி தேர்வுப் பயிற்சி மையம்" என உருமாற்றம் பெற்றது. தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு, அகில இந்திய குடிமைப் பணி தேர்வுகள் எழுத, குறிப்பாக, இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணித் தேர்வுகளுக்குத் தயாராக, அதிக எண்ணிக்கையில் பயிற்சி அளித்து, அவர்களை வெற்றி பெற வைப்பதே இந்தப் பயிற்சி மையத்தின் நோக்கமாகும்.

நாட்டிலேயே மிக உயர்ந்த குடிமைப் பணிகளில் நுழைவதற்கு ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட இசுலாமியர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் ஆகிய இனங்களைச் சேர்ந்தவர்களுக்குத் தங்குமிடம், உணவு, நூலகம், கணினி வசதிகளுடன் கூடிய சீரிய பயிற்சியினை இந்த மையம் ஒரே கூரையின் கீழ் அளித்து வருகிறது. மைய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான பூர்வாங்கத் தேர்வெழுதும் 300 பயிற்சியாளர்களுக்கும், முதன்மைத் தேர்வெழுதும் 200 பயிற்சியாளர்களுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. முதன்மைத் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வை எதிர் கொள்ளும் வகையிலான மாதிரி தேர்வுப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. புதுடில்லியில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதற்காக இந்தப் பயிற்சியாளர்கள் அங்குள்ள தமிழ்நாடு இல்லத்தில் சலுகைக் கட்டணத்தில் தங்குவதற்கு வசதிகள் செய்து தரப்படுகின்றன.

இந்தப் பயிற்சி மையத்தில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்திர உணவுக் கட்டணமாக, ஒரு மாணவருக்கு 800 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. அவர்களுக்கு வழங்கப்படும் உணவு தரமானதாக இருக்கும் பொருட்டு, தற்போதுள்ள மாதாந்திர உணவுக் கட்டணத்தை 800 ரூபாயிலிருந்து 1200 ரூபாய் ஆக உயர்த்தி வழங்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் வரும் ஆண்டுகளில் இன்னும் அதிகமான பயிற்சியாளர்கள் குடிமைப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழகத்தை அகில இந்திய அளவில் தலைநிமிரச் செய்வார்கள்.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9

நாள் : 27.7.2011